**ருஹுண பல்கலைக்கழகம் - 2023**

-------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ருஹுண பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள், பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியாக்கப்படுகினறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது

அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடனான தொடர்புற்ற இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வள்ளமடம வளவில் மற்றும் விவசாய விஞ்ஞான பீடத்தினதும் உள்ளக வீதி அபிவிருத்திக்காக முன்னைய ஆண்டுகளின் போது செலவிடப்பட்ட ரூபா 56,952,897 தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கீழ் கணக்கீடு செய்யப்படமையால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கு மற்றும் திரண்ட நிதி (மூலதனம்) அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் பல தடவை பல்கலைக்கழத்தினால் கோரப்பட்ட போதும் அவர்கள் குறித்த கிரய விபரங்களை வழங்க நடவடிக்கை எடுடுக்கவில்லை. குறித்த செயற்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத்தின் ஏனைய வீரிகள் காபட் இடுவதற்காக வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளதுடன் குறித்த அனைத்து வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்வரும் ஆண்டின் போது நடவடிக்கை எடுப்பதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய மீதிகளை கணக்கீடு செய்யும் போது ரூபா 145,176,156 தொகை செலுத்த வேண்டிய வரி (VAT) கட்டணங்கள் உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்படாமையால் ஒப்பந்த கடன் கொடுத்தோர் மீதி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | விலை விலகல் தொடர்பாக உரிய TEC அங்கீகாரம் 2023.12.31 ஆம் திகதி வரை கிடைக்காமல் இருந்ததுடன் நிதிக் கூற்றுக்களில் நியாயமான பெறுமதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதால் விலை விலகலுக்குரிய அண்ணளவான மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையாகக் கொண்டு 15 ஆம் இலக்க குறிப்பின் கீழ் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப் பட்டுள்ளதாக | ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டிய மீதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 2,726,945 ஆன பதவியணியினர் சம்பளம் அறவிடப்பட வேண்டிய சம்பள கணக்கிற்கும் திரண்ட நிதியக் கணக்கிற்கும் அப்பெறுமானத்தினால் முறையே வரவு மற்றும் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அத்தொகை பிணை முறி மீறல் நிதியக் கணக்கில் (Bond Violation Account) Recievable செலவு வைக்கப்பட்டு பெறவேண்டிய பிணைமுறி மீறல் கணக்கில் (Bond Violation Recievable Account) வரவு வைக்கப்பட்டிருந்தது. | பெறவேண்டிய பெறுமதிகள் Bond Violation and other dues ஒரே கணக்கில் காண்பிக்கும் போது தெளிவற்ற தன்மை ஏற்படுவதால் அடுத்த ஆண்டின் போது other dues இற்காக வேறான கணக்கொன்றைப் பேணி செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உரிய கணக்குகளை சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு உதவியின் கீழ் ஆண்டிற்குரிய மாணவர் உதவி பணம் ரூபா 77,486,000 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டமை காரணத்தினால் நிதிச் செயலாற்றல் கூற்றில் மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் செலவினம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டு இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக | அரசின் மானியம் மற்றும் அதன் செலவினங்கள் சரியாக கணக்கில் கணக்குகளில் நிருபணமாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கல்வி பதவியணியினருக்காக மீளாய்வாண்டிற்குரிய பணிக்கொடை ரூபா 2,573,585 தொகை குறைத்து காண்பிக்க காரணத்தினால் ஆண்டின் பணிக்கொடை செலவினம் மற்றும் பணிக்கொடைக்காக ஒதுக்கீட்டு கணக்கின் மீதி அப்பெறுமானத்தால் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் பணிக்கொடை கணிப்பீட்டின் போது திரட்டிய மீதியான ரூபா 2,573,585 குறைத்து காண்பிக்கப்பட்டதால் 2024 ஆம் ஆண்டில் சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பணிக்கொடை ஒதுக்கீடு சரியாக கணக்கீடு செய்யப்பட்டு செய்யப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

| சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | 2016 முதல் 2021 ஆம் ஆண்டு வரை காணப்படும் மொத்தம் ரூபா 36,044,249 ஆன 34 வைப்புக்கள் மீதிகளை தீர்வு செய்வதற்கோ அல்லது வருமானத்துக்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | இதுவரை நடைமுறை வேலைகளில் ஒப்பந்தம் மற்றும் குறைபாடுகள் சரி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு வழங்காததன் அடிப்படையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டி கோவையின் 8.1 மற்றும் 8.2 ஆம் பந்திகள் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 4,611,856,429 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ரூபா 27,070,448 ஆன கற்பனைச் சொத்துகளுக்குரிய நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டு இருக்கவில்லை. | ருஹுணு பல்கலைக்கழகத்தினால் ஒவ்வொரு பிரிவிலும் நிலையான சொத்துக்களுக்காக முகாமைத்துவ முறைமை ஒன்று பராமரித்துச் செல்லப்படுவதுடன் அம்முறைமையும் அனைத்து பகுதிகளுக்குரிய சொத்துக்கள் தொடர்பான அனைத்து அறிக்கைகளையும் தரவிறக்கம் செய்யக்கூடியதாக உள்ளதாக | அனைத்து பெறுமதிகளும் உள்ளடக்கப்பட்ட அட்டவணை ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,005,010,989 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 888,979,918 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 116,031,071 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு வருமான அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ருஹுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பீடத்தில் 12 மாடிக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்த கம்பனி ஒன்றுடன் இணங்கப்பட்ட உடன்படிக்கை கம்பனியின் பலவீனமான செயலாற்றல் அடிப்படையில் 2020 ஜனவரி 03 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டதுடன் அதற்காக 2022 நவம்பர் 30 ஆம் திகதி இலங்கை வங்கியில் இருந்து கிடைத்த ரூபா 42,544,131 ஆன செயலாற்றல் பிணை பெறுமதி அந் நிர்மானத்திற்காக ஈடுபடுத்தாமல் வழங்கள் மற்றும் பிணை முறி மீறல் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மருத்துவ பீடத்தின் 12 மாடிக் கட்டிட நிர்மாணத்திற்குரிய முதலாவது ஒப்பந்தக்காரரால் குறித்த நிர்மாணம் தொடர்பாக பல்கலைக்கழகத்திற்கு எதிராக நடுவர் மன்று வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது. இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை கோரி உள்ளதுடன் ஆலோசனை கிடைத்தவுடன் வருமானத்துக்கு எடுப்பதற்கு அல்லது அதனை தொடர்ந்து நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செயற்திட்டத்திற்கு உரிய பணத்தை செயற் திட்டத்திற்காக பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளித் தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,387,070 ஆன மீதியை அறவிடுவதற்கு தவறியிருந்தது. அம்மீதியில் 2014-2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,763,613 தொகையும் 2022 ஆம் ஆண்டிற்க்காக ரூபா 1,172,651 தொகையும் 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,450,806 ஆக அறவிடப்பட வேண்டி இருந்தது. | பதில் அளிக்கப்படவில்லையென | நிலுவைத் தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் பொது முகாமையாளராக சேவை புரிந்த ருஹுனு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவருக்கு 2014 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை செலுத்திய சம்பளம் மற்றும் படிகளிலிருந்து ரூபா 1,255,525 தொகை மீளாய்வாண்டியன் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந் நிறுவனத்தில் இருந்து அறவிடப்பட வேண்டி இருந்தது. | எஞ்சிய மீதியை அறவிடுவது தொடர்பாக இந்த அதிகார சபைக்கு அறிவித்துள்ளதாக | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நடடங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உடன்படிக்கை காலப்பகுதியில் பல்கலைக்கழகத்துக்கு பொருட்களை மட்டும் சேவைகளை வழங்குவதற்கு தவறியதன் பேரில் வழங்குனரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணங்கள் வழங்குனர்களின் வேண்டுகோளின் பேரில் பெறுகை குழு மீண்டும் கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2,127,306 மற்றும் ரூபா 413,454 தொகை பல்கலைக்கழகத்திற்கு கிடைக்காமல் போயிருந்தது. | உடன்படிக்கை மீறியதன் பேரில் அறவிடப்பட்ட தாமதக் கட்டணங்கள் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு பரிந்துரை மற்றும் பெறுகை அங்கீகாரத்தின் பேரில் வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக | ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாட்டிலான சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டில் விளையாட்டு அரங்கொன்று நிர்மாணப்பதற்காக பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினால் ரூபா 9,524,500 செலவிடப்பட்டு கையேற்கப்பட்டிருந்த 03 ஏக்கர் அளவிலான காணி உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது. | கொவிட் 19 தொற்று காரணமாக எதிர்பார்க்கப்பட்ட மட்டம் வரை காணியை அபிவிருத்தி செய்ய முடியாதிருந்ததுடன் அக் காணியில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட விளையாட்டு பூமியின் தளத் திட்டம் 2023.10.05 ஆந் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக காணி மற்றும் கட்டிட குழு கூட்டத்திற்காக முன்வைக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்த வேண்டும் |
| (ஆ) ஆராய்ச்சி மற்றும் செயற் திட்டங்களுக்காக மருத்துவ பீடத்திற்கு கிடைத்திருந்த ரூபா 1,408,463 தொகை 4 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக பயன்பாடு மற்றும் காணப்பட்டது | பதில் வழங்கவில்லை என | கிடைத்த பணத்தை உரிய செயற்பாட்டுக்காக ஈடுபடுத்த வேண்டும் |

4. **கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக ஆண்டறிக்கை தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்காக ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |